பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 15 | ஞாயிற்றுக்கிழமை | 31.12.2023 | கதிர் 415

# 2023ஐ விடவும் 2024ஆம் ஆண்டு நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கும்

## அனுரகுமார திஸநாயக்க எச்சரிக்கை

**2023ஆம் ஆண்டில் முகங் கொடுத்த பொருளாதார நெருக் கடிகளை விடவும் 2024இல் பொருளாதார அழுத்தம் மேலும் உக்கிரமடையப்போகின்றது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**மாத்தறை மாவட்டத்தில் நேற்றையதினம் நடைபெற்ற மகளீர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி தலைமைப் போட்டிக்கான பிச்சல் பிடுங்கல்கள் மோதல்கள் விசமப் பரப்புரைகள் எல்லாம் மெல்ல மெல்லத் தீவிரம் பெறத் தொடங்கிவிட்டன. மற்ற எந்தக் கட்சிகளையும்விட உட்கட்சிப் போராட்டத்திற்கு முகப் புத்தகம் போன்ற சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் தொண்டர்கள் தமிழ் அரசுக் கட்சியில் அதிகம். மற்றக் கட்சிகள் எல்லாம் இத்தகைய சமூக ஊடகங்களை தமது எதிர்க் கட்சிகள் மீது சேறடிக்கப் பயன்படுத்தும் என்றால் தமிழ் அரசுக் கட்சி ஆட்கள் மட்டும் கட்சிக்குள்ளேயே சேறடிக்க இந்தச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவார்கள். அதற்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. அப்படிப்பட்ட கட்சித் தொண்டர்கள் ☞ 2

## விசேட விடுமுறை

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இடர்கள் காரணமாக கடமைக்கு சமூகமளிக்க முடியாது போன தினங்களுக்கு அரச ஊழியர்களுக்கு விசேட விடுமுறையளிக்க பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இடர்கள் காரணமாக 2023ஆம் ஆண்டு செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் ☞ 8

# ஆணைக்குழுக்களை அமைப்பது ஏமாற்று நாடகம் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் போர்க்கொடி



வட-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்றுக்காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"சர்வதேச நீதிக்காக போராடி வரும் நாம் பல வருடங்கள் கடந்தும் நீதி மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஏமாற்றத்திற்குள்ளாகி வருகின்றோம்.

அத்துடன் இலங்கை அரசின் ஆணைக் குழுக்கள் மீதும் அதன் விசாரணைகள் மீதும் நாம் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளோம். இந்த நாட்டில் உள்ளவர்களே போரை உருவாக்கி தமிழர்களை அழித்தார்கள். எனவே அவர்களால் உருவாக்கப் படும் ஆணைக்குழுக்கள் மீதும் அலுவலகங்கள் மீதும் எமக்கு துளியும் நம்பிக்கை ☞ 2

## ஜனாதிபதி வேட்பாளர் ஆவதற்கான பெரமுனவின் 10 நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய தம்மிக்க முழு முயற்சி

அடுத்த வருடத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு பொது ஜன பெரமுனவினால் விதிக்கப்பட்ட பத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றும் செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளதாக பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் ☞ 9

# ரணிலின் வடக்கு வருகையை எதிர்த்து உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம்



அரசுத் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் நேற்றுப் ☞ 2

## டிசெம்பரில் பணவீக்கம் 4 சதவீதம் அதிகரிப்பு

கொழும்புநுகர்வோர் விலைச் சுட்டெணின் அடிப்படையில், டிசெம்பர்மாதத்தில்பணவீக்கம் 4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இவ்வருடம் நவம்பரில் 3.4சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் டிசம்பரில் 4சதவீதமாக அதிகரித்துள்ளது.

கொழும்புநுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் டிசம்பர் மாதத்தில் 0.89 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட 1.16 சதவீத அதிகரிப்பும், உணவல்லாப் பொருட்கள் மற்றும் சேவைகளின்விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.27 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்துள்ளன.

கொழும்பு நுகர்வோர்விலைச்சுட்டெண்ணில் வருடாந்த புள்ளி மாற்றத்தின் அடிப்படையில், மாதாந்தம் பணவீக்கம் கணக்கிடப்படுகின்ற நிலையில் இந்த அதிகரிப்பு கண்டறிப்பட் ☞ 8

## மலையகம் 200 முத்திரை இந்தியாவில் வெளியீடு

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை அடுத்து அவர்களின் 'உழைப்பை' அங்கீகரிக்கும் வகையில், நினைவுஅஞ்சல்முத்திரை நேற்று புதுடில்லியில் வெளியிடப்பட்டது.

இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் வழிகாட்டலில், தமிழ்நாடு பாரதீயஜனதாக்கட்சியின் தலைவர் அண்ணாமலையின் ஏற்பாட்டில், பாரதீயஜனதாக்கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா இந்த முத்திரையை வெளியிட்டு வைத்தார்.

இம்முத்திரையை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர்காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில், இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகர், வீரகேசரி பத்திரிக்கையின் முகாமைத்துவ ☞ 8

# பெரமுனவுக்கும் ஆதரவில்லை ரணிலையும் ஆதரிக்கமாட்டேன்

### சம்பிக்க ரணவக்க அறிவிப்பு

நான் பொது ஜன பெரமுனவை ஆதரிக்கிறேன்அல்லதுரணிலை ஆதரிக்கிறேன் என்ற தகவல்கள் பொய்யானவை என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது ☞ 8

## வற் வரியால் அடுத்தாண்டு நீர்க் கட்டணமும் உயர்கிறது

### போக்குவரத்து, தபால் கட்டணங்களையும் மீளாய்வு செய்ய முடிவு

பெறுமதி சேர்வரி (வற்வரி) நாளை முதல் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தப்படவுள்ள நிலையில், நீர்க்கட்டணங்களையும் 3 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், போக்குவரத்து கட்டணங்கள் மற்றும் தபால் சேவைக் கானகட்டணங்கள்ஆகிய வற்றையும் மீளாய்வு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும்தெரியவருதாவது:

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் பியல் பத்மநாத கஜவீர ஆராய்ச்சி தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டு ஜனவரி1ஆம்திகதி முதல் அமுலுக்குவரும்வற்வரி திருத்தத்தின் காரணமாக தண்ணீருக்கும்பெறுமதி சேர் வரியை உள்ளீர்க்க வெண்டியுள்ளது. ☞ 2

## சுகாதார ஊழியர்கள் தொடர்பில் ஆண்டுக்கு 600 முறைப்பாடுகள்

சுகாதார ஊழியர்கள் தொடர்பில் வருடாந்தம் 600 முறைப்பாடுகள் கிடைப்பதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ்பத்திரண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார ஊழியர்கள் தொடர்பில் வருடாந்தம் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இந்த முறைப்பாடுகளின்அடிப்படையில் அவர்கள் தமது கடமைகளை சரியாகச் செய்துள்ளார்களா என்ற கேள்விகள் எழுகின்றன.

அனைத்து சுகாதார ஊழியர்களும் சிறந்த சுகாதார சேவையை மக்களுக்குவழங்கினால் சிறந்த சுகாதார ☞ 2

# இந்தியாவிலிருந்து 6 மில்லியன் முட்டைகள் வந்து சேர்கின்றன

இந்தியாவில் இருந்து மேலும் 6 மில்லியன் முட்டைகள் இன்றையதினம் இறக்குமதி கொண்டுவரப்பட வுள்ளதாக அரசவணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித் துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## சிஐடி எனக்கூறி கொள்ளையிட்ட மூன்று பேர் வவுனியாவில் கைது

சிஐடி எனக் கூறி வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் கொள்ளையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரால் நேற்றுக் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா, தாண்டிக்குளம்பகுதியில் உள்ள பேரூந்து தரிப்பி டத்தில் நேற்று நின்ற மூன்று ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தலைமைப் போட்டியில் மட்டும் சும்மா இருப்பார்களா? அவர்கள் ஏற்கனவே சேறடிப்புக்களைத் தொடங்கிவிட்டார்கள். தலைமைப் போட்டிக்கு இன்னும் 20 நாள்களே இருக்கும்நிலையில்வரும்நாட்களில் இந்தச் சேறடிப்புக்கள் இன்னும் தீவிரம் பெறும். சமூக ஊடகப் போராளிகள்இரண்டுபடுத்துவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அது ஒரு புறம் இருக்க, டிசெம்பர் 18 திருகோணமலையில் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. அதற்குமுதல்நாள்திருகோணமலை கட்சிக் கிளை அலுவலகத்தில் கட்சியின் ஒழுக்காற்றுச் சபை கூடி பெருந் தலைவர் சம்பந்தனின் முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்திருக்கிறது. சம்பந்தனின் முறைப்பாடே திருகோணமலை மாவட்டக் கிளை மற்றும் மூலக் கிளைத் தெரிவுகளில் தனது ஆதரவாளர்கள் வேண்டும் என்றே புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள், உதாசீனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதுதான்.

அதைச் செய்தவர் என்று தெரிவிக்கப்படுபவர் திருகோணமலைக் கிளையை இப்போது தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியவரான குகதாசன். இவரும் சம்பந்தரால்தான் வெளிநாட்டில் இருந்து அழைத்துவரப்பட்டவர். தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அவருக்குத் தரப்படும் என்று உறுதிமொழிகூறி அழைத்துவரப்பட்ட அவர் பின்னர் அம்போ என்று கைவிடப்பட்டார். அதன் பின்னர் சம்பந்தர் ஒரு வருடத்தில் பதவி விலகி அந்த இடத்திற்கு குகதாசன் நியமிக்கப்படுவார் என்று கூறப்பட்டதாகவும் கட்சிக்குள் கதை உண்டு. இப்படி வஞ்சிக்கப்பட்ட, சம்பந்தரின் முன்னாள் நெருங்கிய சகாவான குகதாசன் மீதுதான் இப்போது சம்பந்தனின்ஆட்களைபுறக்கணித்து தி-ருகோணமலைக் கிளைக் குழுத் தேர்தலைநடத்தியிருக்கிறார்என்கிற குற்றச்சாட்டு.

அந்தக் குற்றச்சாட்டை விசாரிக்கவேண்டிய கட்சியின் ஒழுக்காற்றுக் குழுத் தலைவர் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவருமான யோகேஸ்வரன். ஒழுக்காற்றுக் குழுக் கூட்டம் திருமலையில் கூடுகின்றது என்று அறிந்து விழுந்தடித்துப் புறப்பட்டுப் பாதித் தூரம் வந்துவிட்ட அவருக்கு, ''நீங்கள் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவர் என்பதால் இந்த ஒழுக்காற்று விசாணைக்குத் தலைமை தாங்குவது இயற்கை நீதியல்ல''என்றுதெரிவிக்கப்பட்டதை அடுத்துஅவர்வந்தவழியேதிரும்பிச் சென்றுவிட்டாராம். அதன் பின்னர் ஒழுக்காற்றுச் சபை சம்பந்தரின் முறைப்பாடுகுறித்துஅலசிஆராய்ந்து ஒரு முடிவை எடுத்திருக்கிறது. அந்த முடிவில் சம்பந்தருக்கு உடன்பாடில்லை என்று வெளியே சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில்தான் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் ஜனவரி 1-0 கொழும்பில் சம்பந்தனின் வீட்டில் இடம்பெற்றவுள்ளது. அதாவது கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் இடம்பெறுவதற்கு 11 நாட்களுக்கு முன்னதாக இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில், சம்பந்தரின் தலையீட்டின் கீழ், கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை நிறுத்துவது தொடர்பில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றொரு கதை கட்சி ஆதரவாளர்களுக்குள் பரப்பப்பட்டு வருகின்றது. ஆனால், அதற்கான சாத்தியங்கள் வெகு குறைவு என்றே விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்படாவிட்டால் யாரை அடுத்த தலைவராகத் தெரிவு செய்யவேண்டும் என்கிற முடிவை சம்பந்தர் ஊடாகத் தீர்மானிப்பதற்கான நகர்வுகள் மும்முரமாக இருக்கும் என்றும் அந்தவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

பொதுக் கூட்டம் நடந்தால் போட்டி தவிர்க்க முடியாதது. அதனால் பொதுக்கூட்டத்திற்குமுன்னதாகவே, கட்சியின் பாரம்பரியம், வழக்கம், இதுவரையில் கட்சிப் பதவிகள் ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற இன்னோரன்ன காரணங்களை முன்வைத்து இரு வேட்பாளர்களை போட்டியிலிருந்து விலகச் செய்வதற்கான முயற்சிகள் நடக்கும் என்று தெரிகின்றது. தலைமைப் போட்டியால்கட்சிபிளவுபட்டுவிடாமல் இருப்பதற்காகத்தான் இந்த முயற்சி என்றுசொல்லப்படுகின்றது. ஆனால், ஒருவேளைசம்பந்தரின்ஆதரவுடன் போட்டியின்றி சின்ன ஜமீன் தலைவராகும் நிலை ஏற்பட்டாலும் கட்சி பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது என்று உறுதியாகத் தெரிவிக்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். ஏறச் சொன்னால் முடவனுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் எருதுக்குக் கோபம் என்கிற நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் போட்டியே பெரும் அக்கப்போராகத்தான் இருக்கப் போகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 2023ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் இந்த மேடையில் ஒரு விடயத்தினை சுட்டிக்காட்டப் போகின்றேன். இதனால் பெண்கள் கோபமடைய வேண்டாம். நான் அதனைச் சுட்டிக்காண்பிப்பதற்காக என்னைமன்னித்துக்கொள்ளுங்கள்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு பெண்கள் காலையிலேயே வருகை தருவதால் மஹிந்த வெற்றிபெறுவார் என்று ஒருகாலத்தில் கூறினார்கள்.

அவ்வாறு கூறுவதற்கு காரணம், பெண்களின் வாக்குகளையே நோக்கமாகக் கொண்டு அதிகாரங்களை கைப்பற்றினார்கள். ஆனால் பெண்களுக்காக எதனையும் செய்யவில்லை.

முன்னர் சமையல் எரிவாயு, பால்மா, பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றுக்கு வற்வரி விதிக்கப்படவில்லை. ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இந்த அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியையும் அதிகரிக்கவுள்ளனர். இதனால் 2023ஆம் ஆண்டில் முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடிகளை விடவும் 2024இல் பொருளாதார அழுத்தம் மேலும் உக்கிரமடையப்போகின்றது.

டொலரின் பெறுமதி மற்றும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில்தான் நெருக்கடிகள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க கணிப்புக்களைச் செய்கின்றார். அவருக்குமக்களின்உண்மையான நிலைமை தெரியாது.

நாட்டு மக்கள் மிகவும் சவாலான காலத்தினையே தற்போது கடந்து செல்கின்றனர். அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரும் நெருக்கடி இதுவாகும். ஆகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பயணத்தினை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இதற்காக நாம் ஒருமித்துப் பயணிக்கவேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் இலக்குடன் பயணிக்க வேண்டும். இதற்கு பெண்கள் முன்வர வேண்டும். அடுத்த தேசிய தேர்தலில் இந்த மாற்றத்துக்கான ஆரம்பத்தினை நாம் ஏற்படுத்த வேண்டும். பயணத்தின் முதலடியை வைக்க வேண்டும் என்றார்.

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை மேலும் வலுப்படுத்த முடியும்.

ஆனால் சுகாதார ஊழியர்களின் தரப்பில் தவறுகள் இழைக்கப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளமை அவசியமாகின்றது என்றார்.

## ஆணைக்குழுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை" என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இழப்பீடு வழங்குவதும், இறப்புச்சான்றிதழ் வழங்குவதுமே அவர்களது நோக்கமாக உள்ளது. எமக்கு அது தேவையில்லை. எமது உறவுகளே தேவை. 12 ஆணைக்குழுக்களுக்கு மேல் அமைத்துவிட்டார்கள். அனைத்துமே ஏமாற்று நாடகம். எனவே பிறக்கின்ற புதிய வருடத்திலாவது எமக்கான நீதியை வழங்குவதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "12 ஆணைக்குழுக்களுக்கு மேல் ஏமாற்று நாடகம்'', ''ராஜபக்ஸ குடும்பம் பேரக் குழந்தைகளைக் கொஞ்சி மகிழும்போது நாம் பேரக் குழந்தைகளை தேடி வீதியில் நிற்கிறோம்;'', ''குடும்பங்களாகச் சரணடைந்தபோது அவர்களுடன் சரணடைந்த29குழந்தைகள்எங்கே" என எழுதப்பட்ட அரசிற்கு எதிரான பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் முழக்கங்களையும் எழுப்பினர்.

(100)

## ரணிலின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடத்தினர்.

காலை 10.30 மணியளவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது கிளிநொச்சி அலுவலகத்தின் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்குநீதிவேண்டும்என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இதன்போது, எமது உறவுகள், காணி, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கவனம் செலுத்தாத ஜனாதிபதி வடக்குக்கு வருகை தருவதைத் தாம் எதிர்க்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தமக்கு நீதி தராத தரப்புடன் நல்லிணக்க பேச்சு மேற்கொள்ள முடியாது என்றும் அவர்கள் திட்டவட்டமாகக் கூறினர்.

கடைசி ஒரு தாயார் இருக்கும் வரை எமது தொடர் போராட்டம் தொடரும் எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

அண்மையில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் சில நாட்களில் போராட்டத்தில் கலந்துகொண்ட தாயார் ஒருவர் உயிரிழந்திருந்தார். அதனாலேயே கடைசித் தாய் இருக்கும் வரை போராட்டம் தொடரும் என்று அவர்கள் கூறினர். (113).

## பெரமுனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. எனினும் அவ்வாறு போட்டியிடுவதாக இருந்தால் பொது ஜன பெரமுனவினால் 10 எனக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களை தனியாருக்கு வழங்குவதை தவிர்த்தல், பொதுமக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரிச் சுமையை குறைத்தல் ஆகியவை அந்த 10 நிபந்தனைகளுக்குள் உள்ளடங்குகின்றன.

ஆகவே நான் முதலில் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளேன். இந்தநிலையில், 5 வருடங்கள் ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்கும் போது, திட்டமிட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அதன்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை அறிவிப்பதற்கு இன்னும் 286 நாட்கள் உள்ளன.

அதற்கிடையில், குறித்த 10 நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து பொது ஜன பெரமுன கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தாம் எதிர்பார்க்கின்றேன்.

பொதுஜனபெரமுனமிகப்பெரிய கட்சியாகும். ஆகவே அந்தக்கட்சியில் வேட்பாளராகும்போது மக்கள் நம்பிக்கையை வென்றெடுப்பது மிகவும் முக்கியமானது.

மேலும், நாட்டின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அந்தச்சவால்மிக்க பணியை முன்னெடுப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன் என்றார்.

## பெரமுனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் 3 சதவீதமான பெறுமதி சேர் வரி விதிக்கப்படவுள்ளமையால் நீர்க்கட்டணங்கள் உயர்த்தப்படவுள்ளன. அதன்படியிலேயே குடிநீருக்கான கட்டணமும் உயரவுள்ளது.

மேலும், தற்போது நீர்க்கட்டணங்களில் 15 சதவீதமான வற்வரி விதிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

இதேவேளை, வற்வரி அதிகரிப்பு காரணமாக குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 35 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

டீசலுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளமையினால், ஜனவரி மாதம் முதல் அதன் விலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பஸ் கட்டணதிருத்தத்தை மேற்கொள்வது கட்டாயமானது என்றார்.

அதேநேரம், வரி அதிகரிப்பினால் தமது தொழிலை முன்கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சங்கத்தின் செயலாளர் மல்ஸ்ரீ டி சில்வா டீசலின் விலை அதிகரிக்கப்படுமாயின், பாடசாலை போக்குவரத்து சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கப்படுமென, தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படுமாயின், முச்சக்கர வண்டி கட்டணங்களை மறுசீரமைப்பது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படுமென முச்சக்கர வண்டி சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்நிலையில், தபால் சேவைகளுக்கான கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, குறிப்பாக மூலப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு மற்றும் ஏனைய செலவுகளின் அதிகரிப்பு காரணமாக இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

எனினும், இது தொடர்பான கலந்துரையாடல் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதன்போதே இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிஐடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் அவ் வீதியால் மோட்டர் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவரை மறித்து தாம் சிஐடி எனக் கூறி, தம்மை தாண்டிக்குளம் குளக்கட்டுபகுதியில்இறக்கிவிடுமாறு கேட்டுள்ளனர். இதனை நம்பிய குறித்த இளைஞன் அவர்களை ஏற்றிக் கொண்டு தாண்டிக்குளம் குளக்கட்டுப்பகுதியால்சென்றபோது குறித்த இளைஞனிடம் இருந்த கைத் தொலைபேசியை பறித்து கொண்டு மூன்று இளைஞர்களும் தப்பி சென்றுள்ளனர்.

இதனையடுத்து, குறித்த மூவரும் மடுகந்த பகுதிக்கு சென்று அங்கு வீதியால் சென்ற பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கொள்ளைகளுக்குக் காரணமான குறித்த மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து திருடப்பட்ட சங்கிலி மற்றும் கைத் தொலைபேசி என்பனவும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம்மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின் போது வவுனியாவில் திருடப்பட்ட 2 மோட்டர் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் திருடப்பட்ட மோட்டர் சைக்கிள் ஒன்றும், லப்டொப் ஒன்றும், கைத்தொலைபேசி ஒன்றும்கூட மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவர்கள் மகாறம்பைக்குளம் (வயது 23), கிளிநொச்சி (வயது 28, வயது 29) ஆகிய இடங்களைச்சேர்ந்தவர்கள்.

கிளிநொச்சியில் திருடப்பட்ட பொருட்கள் கிளிநொச்சி பொலிசாரிடம் வவுனியா பொலிசார் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் திருடப்பட்ட பொருட்களையும்குறித்த மூவரையும்நீதிமன்றில்முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

(100)




காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய - இலங்கை நட்பை வலுப்படுத்த மீண்டும் ஒருமுறை வாய்ப்பு கிடைத்தது

## தூதுவர் சந்தோஷ் ஜா

இந்திய - இலங்கை இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் இலங்கையின் நலனுக்காக நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் உத்தேச கூட்டுத் திட்டங்களை விரைவுப்படுத்துவதற்கான வழி வகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி துறையில் இந்திய முதலீடுகளை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள், துறைமுகம், ரயில் பாதைகள் தொடர்பான கூட்டுத் திட்டங்கள் மற்றும் விவசாயம் மற்றும் கடற்றொழில் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள கடன் மறுசீரமைப்பு வசதிகளை விரிவுபடுத்தி நிவாரணப் பொருள்கள், உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். திரவத்தன்மை சிக்கல்களைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவித்திட்டத்தை பெறுவதற்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 2007 முதல் 2010 வரை இலங்கையில் சேவையாற்றிய காலத்தை நினைவு கூர்ந்ததுடன் இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை கொழும்புக்கு விஜயம் செய்யக்கிடைத்தமையை பெரும் பாக்கியமாகக் கருவதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் நலனுக்காக நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படுவதும் இருநாடுகளின் தலைவர்களும் ஒப்புக்கொண்ட இந்திய - இலங்கை ஒத்துழைப்பின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அதன் 14 அம்ச வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது தனது பணியாகும் என இந்திய உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார். (05)

# கொழும்பு – காங்கேசன்துறை ரயில் ஜனவரி 7 முதல் தற்காலிக நிறுத்தம்

வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதால் எதிர்வரும் ஜனவரி மாதம் 07 ஆம் திகதி முதல் ஐந்து மாதங்களுக்கு கொழும்பு கோட்டை முதல் காங்கேசன்துறை, யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்படும்.

கொழும்பில் இருந்து செல்லும் யாழ் நிலா ரயில் திருகோணமலைக்கு செல்லும் என ரயில்வேத் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொல தெரிவித்தார்.

அரசாங்கதகவல்திணைக்களத்தில் இடம்பெற்றஊடகவியலாளர்சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

மஹவ முதல் அனுராதபுரம் வரையிலானரயில்பாதைஅபிவிருத்தி செய்யப்படவுள்ளதால் எதிர்வரும் ஜனவரி மாதம் 07 ஆம் திகதி முதல் ஐந்து மாதங்களுக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்படும்.

அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும் குறித்த காலப்பகுதியில் அநுராதபுரம் முதல் யாழ்ப்பாணம் வரை இரண்டு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும். அத்துடன் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் யாழ் நிலா ரயில் அனுராதபுரத்தில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று,திருகோணமலையில் இருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் நோக்கி புறப்படும். -என்றார். (05)

# 25 வீதமானோர் பயணச்சீட்டு பெறுவதில்லை தண்டத்தை ரூ. 10,000 ஆக அதிகரிக்க முடிவு

ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளில் 25 சத வீதமானோர் பயணச்சீட்டு பெறாமல் பயணம் செய்கிறார்கள். ஆகவே பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் தண்டப்பணத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் எச்.எம்.சி. பண்டார தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அடுத்தஆண்டுமுதல்தனியார் துறையினரது ஒத்துழைப்புடன் ரயில் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும். ரயில் திணைக்களத்துக்கு சொந்த மான காணிகள் சட்ட விரோதமான முறையில் குடியிருப்பவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு புதிய வழிமுறை ஒன்று செயற்படுத்தப்படும்.

ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளில் 25 சத வீதமானோர் பயணச்சீட்டு பெறாமல் திருட்டுத்தனமான முறையில் பயணிக்கிறார்கள். இதனால்ரயில்வேத்திணைக்களம் நாளாந்தம் சுமார் 30 மில்லியன் ரூபா வருமானத்தை இழக்கிறது. ஆகவே பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பவர்களிடமிருந்து அறவிடும் தண்டப்பணத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மேலதிகமாக 20 ரயில் என்ஜின்களை கொள்வனவு செய்ய பேச்சு முன்னெடுக் கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் ரயில் சேவையை வினைத்திறனான முறையில் முன்னெடுக்க முடியும். -என்றார். (05)

# அனைவரும் ஒன்றுபட்டால் அடுத்தாண்டு பொருளாதாரத்தை நிலைப்படுத்தலாம்

## ஆஷூ மாரசிங்க நம்பிக்கை



அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் அடுத்த வருடம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு, பொருளாதாரத்தை ஸ்திர நிலைக்கு கொண்டுவர முடியும். அத்துடன் ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார முகாமைத்துவம் திட்டத்தின் மூலம் நாட்டின் தேசிய வருமானத்தை 3 மில்லியனுக்கு நெருங்க முடியுமாகி இருக்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூமாரசிங்கதெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தூரநோக்கு வேலைத்திட்டம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக ஸ்திர நிலையை அடைந்துவருகிறது.

அரச வருமானம் மற்றும் டொலர் கையிருப்பை அதிகரிப்பது மிகவும் சவால்மிக்க விடயமாகும்.

என்றாலும் ரணில் விக்ரமசிங்க மிகவும் திறமையாக பொருளாதாரத்தை முகாமைத் துவம் செய்துகொண்டுநடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதால் இந்த சவாலை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கைஎமக்குஇருக்கிறது.

அத்துடன் கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நாட்டின் பொருளாதாரம் ஸ்திர நிலையை அடைந்துவருவதை தரவுகளின் மூலம் தெரிந்துகொள்ள முடியும்.

இந்த வருடத்தில் 28 ஆம் திகதிவரை வரி வருமானமாக 2720 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றிருக்கிறது.

அதேபோன்று வரி அல்லாத வருமானமாக 253 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதன் பிரகாரம் மொத்த தேசிய வருமானம் 2973 பில்லியன் ரூபா இதுவரை பதிவாகி இருக்கிறது. இந்த வருடம்முடிவடையஇன்னும் சில தினங்கள் இருக்கின்றன. அதனால் தேசிய வருமானம் மேலும் அதிகரிக்கும்.

மேலும் நாட்டின் மொத்த தேசிய வருமானத்தை 3 மில்லியனாக அதிகரிப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது. அந்த இலக்கை தற்போது எட்டக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த வருடத்தில் மொத்த தேசிய வருமானம் 2850 பில்லியனாக இருக்க வேண்டும் என்பதே சர்வதேச நாணய நிதியம் எமக்கு வழங்கி இருக்கும் இலக்காகும்.

தற்போது நாங்கள் அந்த இலக்கைத் தாண்டியுள்ளோம். அதேநேரம் 2023இல் மொத்த அரச செலவு 3063 பில்லியனாகும்.

அரசாங்கத்துக்கு வரி செலுத்தக்கூடியவர்களின் வரி பணத்தை முறையாக பெற்றுக்கொண்டால் எமது வருமானத்தை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

அத்துடன் ஜனவரி முதல் வற்வரி அதிகரிக்கப்படுவதன் மூலம் ஒரு குடும்பத்தின் செலவு 40ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை.

ஏனெனில் வரி விதிக்கப்பட்டிருக்கும் பொருள்களில் இருந்து அத்தியாவசிய பொருள்கள் இந்த வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியாயின் எந்த அடிப்படையில் 40ஆயிரம் ரூபா அதிகரிக்கும் எனத் தெரிக்க முடியும்?.

அதேநேரம் வரி அதிகரிக்கப்படுவதால்பணவீக்கம் நூற்றுக்கு2அல்லது3வீதம்அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. என்றாலும் அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டிய நிறுவனங்களிடமிருந்து முறையாக வரிகளை அறவிட நடவடிக்கை எடுத்தால் பணவீக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

அதனால் அடுத்த வருடத்தில் இருந்து வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கண்காணிக்க முறையான வேலைத்திட்டம் அமைத்திருக்கிறோம். - என்றார். (05)

# கசிப்பு உற்பத்தி நிலைய முற்றுகையில் ஒருவர் கைது

## முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் சம்பவம்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - இடைக்கட்டுபகுதியில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் இரண்டு முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் 810 லீற்றர் கோடாவுடன்சந்தேகநபர்ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில்கசிப்புஉற்பத்திநிலையம் முற்றுகையிடப்பட்ட சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இடைக்கட்டு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் செயற்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதன்போது புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட விடேசுற்றிவளைப்புநடவடிக்கையின்போது கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 14 பரல், 810 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பினையும் அப்பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (05)

# ஆண் ஒருவரின் சடலம் களுத்துறையில் மீட்பு

களுத்துறை - வெலிபென்ன, பல்லேகொட வீதியில் ஆண் ஒருவரின் சடலம் வெலிபென்ன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 35 முதல் 40 வயதுக்குட்பட்ட நபரொருவராவார்.

குறித்த சடலம் களுத்துறை - நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிபென்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 2024இல் நம்பிக்கை தருவதற்கு செய்யவேண்டியவை அதிகமுண்டு

2023 முடிவுக்கு வந்துவிட்டது. 2024இல் வரி அதிகரிப்புக்களால் பொருள்களின் விலைகள் எகிறப் போகின்றன என்ற அச்சத்துடனேயே பொதுமக்கள் புத்தாண்டுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. ஆனால் 2024 ஆம் ஆண்டை ஆளும் தரப்பு நம்பிக்கையுடன் எதிர்நோக்குகிறது, இது பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீட்சியின் ஆண்டாக இருக்கும் என்ற நம்புகின்றது. கடன் மறுசீரமைப்பை முழுமையாகப் பெறுவது மற்றும் வங்குரோத்து நிலையை முடிவுக்கு கொண்டு வருவது ஆகியன இந்த ஆண்டில் நடக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பு ஆட்சியாளர்களிடம் உண்டு.

ஆளும் தரப்பும் ஆட்சியாளர்களும் என்ன சொன்னாலும் மக்களின் பார்வையில் 2024 பேரச்சத்தை ஊட்டுவதாகவே இருக்கின்றது. ஆளும் தரப்புப் பக்கம் இருந்து அரசின் செலவுகளைக் குறைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல், அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்காக வரிக்கு மேல் வரி என்று அனைத்துச் சுமைகளையும் பொது மக்கள் மீதே சுமத்தும்போது பொதுமக்களாலும் வேறு எப்படித்தான் எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு யாரும் பொறுப்பேற்காத நிலையிலும், இந்த விடயத்தில் உச்ச நீதிமன்றத்தின் முக்கிய உத்தரவு இருந்தபோதிலும் அதற்குரியவர்கள் எந்த தண்டனைகளையும் எதிர்நோக்காத போதிலும் சாமானியர் எவ்வாறு ‘நல்ல மாற்றத்தை‘ எதிர்பார்க்க முடியும்? உண்மை என்னவென்றால், அரசின் சில பிரிவுகள் நம்பிக்கையுடன் இருந்தாலும், ”2024இல் இலங்கை மீண்டுவிடும்’’ என்ற ஆளும் தரப்பின் கதையை இலங்கையின் பெரும்பான்மையானவர்கள் நம்பவில்லை. அதற்குக் காரணம் ஆளும் தரப்பு போதுமான வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை என்பதுடன் அதன் கொள்கைகளுக்குப் பின்னால் உள்ள நியாயமும் போதுமான வகையில் எடுத்துக்கூறப்படவில்லை என்பதாகும்.

ஏற்கனவேபலவீனமானஅரசநிறுவனங்களையும், பல தசாப்தங்களாக மோசமான நிர்வாகத்தையும் கொண்டிருக்கும் இலங்கை, அதிலிருந்து மீள்வதற்கான வெளிப்படையான திட்டங்களைக் கொண்டிருக்காத நிலயை0ல் ஆளும் தரப்பின் கதைகளைநம்புவதற்குஎந்தஏதுநிலையும்இல்லை.

எனவே, ஆ–ளும் தரப்பும், அரச நிறுவனங்கள் மற்றும் இலங்கைக்கு உதவும் பன்னாட்டு முகவர் நிலையங்கள் என்பன வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதுடன், ஏற்கனவே மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குகொள்கைமாற்றங்களைவிளக்குவதும் இன்றியமையாததாகும். ஆளும்தரப்புசிலகொள்கை மாற்றங்களை விரைவாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யப்படும் மாற்றங்கள் அடித்தட்டு மக்கள் வரைக்கும் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

வலுவான கொள்கை விவாதத்திற்கு போதுமான இடம் வழங்கப்படுவது மிக முக்கியமானது, மேலும் புதிய தேசியக் கொள்கைகளை பொதுமக்களுக்கு விளக்குவதற்கு ஆளும் தரப்பு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும். சில கொள்கை உடன்பாடுகளும்இருக்கவேண்டும். 2024 இல்ஆளும் தரப்புமேலும்சிக்கனநடவடிக்கைகளைஎதிர்கொள்ள நேரிடும். அத்தகைய நடவடிக்கைகளுக்கான எதிர்வினை எப்படி இருக்கின்றது என்பதைப் பொறுத்தே அடுத்த ஆண்டு இலங்கை முன்னேறுமா இல்லையா என்பது முடிவு செய்யப்படும்.



# நடிகனாக இருப்பதைவிட நல்ல மனிதனாக வாழ்ந்து காட்டிய விஜயகாந்த்

கே.கே.மகேஷ்

மதுரையில் அழகர்சாமி - ஆண்டாள் தம்பதியின் நான்கு குழந்தைகளில் மூன்றாவதாக 1952 ஓகஸ்ட் 25இல் பிறந்தவர் விஜயகாந்த். இயற்பெயர் விஜயராஜ். கைக்குழந்தையாக இருந்தபோதே தாயை இழந்த இவருக்கு அதீத செல்லம் கொடுத்தார் அழகர்சாமி. இளம் பருவத்தில் குறும்பு அதிகம். படிப்பில் ஈடுபாடு இல்லை. வகுப்புக்கு வகுப்பு பள்ளி மாறினாலும் கடைசிவரை படிப்பில் ஆர்வம்ஏற்படவில்லை. ஆனால், பின்னாளில் தமிழகம் அறிந்த ஆளுமையானார்.

### திமுக அபிமானி

சிறுவனாக இருந்தபோது, மதுரையில் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் உச்சத்தில் இருந்தது. எல்லா இளைஞர்களையும்போல விஜயகாந்தும், அவரது அண்ணன் நாகராஜும் திமுக அபிமானிகளாகிவிட்டார்கள். இரண்டு முறை மதுரை நகராட்சி கவுன்சிலராக இருந்த அழகர்சாமி, மூன்றாவது முறை காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளருக்காக வேலைபார்த்து, சொந்தத் தந்தையையே தோற்கடித்தார் விஜயகாந்த். அந்த அளவுக்குத் திமுக மீது பேரபிமானம் கொண்டிருந்தார். இவரது திருமணத்தை நடத்தி வைத்தவரும் கருணாநிதிதான்.

### ரைஸ் மில் முதலாளி

பையனுக்குப் படிப்பில் ஆர்வமில்லை என்பதை உணர்ந்த அழகர்சாமி, கீரைத்துறையில் இருந்ததனதுஅரிசிமில்லைக்கவனித்துக்கொள்ளும் பொறுப்பை விஜயகாந்திடம் ஒப்படைத்தார். தொழிலாளர்களுடன் தொழிலாளியாக மூட்டை தூக்குவது, மில்லிலேயே படுத்துக்கொள்வது என்றிருந்தார் விஜயகாந்த். வேலை நேரம் போக மீதி நேரங்களில் சுந்தரம், ராதா, சுந்தரராஜன், வீரபத்திரன், இப்ராஹிம், ராமுவசந்தன், ரவீந்திரன், ஆழ்வார் என்று நண்பர்கள் கூட்டத்துடனே சுற்றித்திரிவார்.

### நடிகர் விஜயகாந்த்

நண்பர்களுடன் அவர் கொட்டமடித்த, மதுரை மேல ஆவணி மூலவீதியில் ‘சேனாஸ் ஃபிலிம்ஸ்’ என்ற ஒரு பட விநியோக நிறுவனம் இருந்தது. அதன் உரிமையாளர் முகமது மார்சூக், தம்பி, நீங்க ரஜினிகாந்த் மாதிரியே இருக்கீங்க’’ என்று சினிமாஆசையைத்தூண்டினார். மார்சூக் விநியோகஸ்தராக இருந்த ஒரு படத்தின் வெற்றி விழாவுக்கு வந்த ரஜினியை நேரில் பார்த்ததும் உத்வேகம் தந்தது. மார்சூகின் நண்பரும் இயக்குநருமான எம்.ஏ.காஜாவின் மூலம், ‘இனிக்கும் இளமை’ படத்தில்முதல்வாய்ப்புகிடைத்தது. விஜயகாந்த் ஆனார் விஜயராஜ்

### ஈழத்தமிழர் ஆதரவு

தொடக்கத்தில் கிராமம் சார்ந்த கதைகளில் நடித்த விஜயகாந்த், பிறகு ஆக்ஷன் ஹீரோவானார். ஒருகட்டத்தில் அரசியல் படங்களில் கவனம் செலுத்தத் தொடங்கினார். ஈழப் பிரச்சினையில் ஆர்வம் காட்டிய அவர், தனது 100ஆவது படத்துக்கு ‘கேப்டன் பிரபாகரன்’ என்று பெயர் வைத்ததுடன், மூத்த மகனுக்கும் பிரபாகரன் என்றே பெயர் சூட்டினார். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் பிறந்த நாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து வந்தார். 1991இல் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது, திமுக தலைவர்களின் வீடுகள் மட்டுமின்றி விஜயகாந்தின் வீடும் குறிவைத்துத் தாக்கப்பட்டது.

### கருப்பு எம்ஜிஆர்

தனது வருவாயில் 10%ஐ ரசிகர் மன்றங்கள் வாயிலாக நலத்திட்ட உதவிக்காக வழங்கிய விஜயகாந்த், 1990க்கு முன்பே ஈரோட்டில் இலவச மருத்துவமனை, புதுக்கோட்டையில் திரு மண மண்டபம் கட்டினார். சுமார்30ஆண்டுகளாகசென்னை கோயம்பேட்டில் ஞாயிறுதோறும் அன்னதானம் வழங்குகிறார். தவிர கார்கில் போர், குஜராத் பூகம்பம், ஒடிசா வெள்ளம், ஆந்திரப் புயல், கும்பகோணம் தீ விபத்து, சுனாமிப் பேரழிவு என்று எல்லாவற்றிலும் முதல் ஆளாக நிதி கொடுத்து, பெரிய நடிகர்களும் கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினார். எம்ஜிஆரின் ராமாவரம் தோட்டத்து மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் பள்ளிக்கு வருடந்தோறும் ரூ.50 ஆயிரம் (இந்திய ரூபாய்) நிதி வழங்கினார். அந்த மரியாதைதான் எம்ஜிஆரின் பரப்புரை வேன், விஜயகாந்திடம் கைமாறக் காரணம்.

(10ஆம் பக்கம் பார்க்க......)



காலைக்கதிர் Kalaikkathir

# போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றும் யோசனையே இமயமலைப் பிரகடனம்

## கனடா பிரம்டன் மேயர் கண்டனம்




உலக தமிழ்பேரவையும் கனேடிய தமிழ் காங்கிரஸும் தமிழ்மக்களின் அபிலாசைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளதாக கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்கள் தப்பியோடிவந்துள்ளனர்.

2009 இல் இனப்படுகொலை உச்சக் கட்டத்தை அடைந்த காலம் முதல் தமிழ் மக்களிற்கு இழைக்கப்பட்ட மிகவும் கொடூரமான குற்றங்களிற்காக நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என நான் வலியுறுத்திவந்துள்ளேன்.

இலங்கையில் நீதி பொறுப்புக்கூறல் இன்றி அமைதி, சமாதானம் சாத்தியமில்லை.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை ஆதாரங்களைச் சேகரித்துவருவதுடன் இலங்கையின் யுத்த குற்றவாளிகளிற்கு எதிரான விசாரணைகள் உட்பட சாத்தியமான மூலோபாயங்களை முன்வைக்கவுள்ளது.

கனடாவின் பிரம்டன்நகரமும் கனடாவின் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளானார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

எனினும் உலகத் தமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரசின் ஆலோசனை குழுவின் உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கையின் யுத்தக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இது நீதி பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் ஓர் அடி பின்னோக்கிய நடவடிக்கையாகும்.

தமிழ் மக்களிற்கு எதிரான மிக மோசமான குற்றங்களுக்காக கனடாவில் தடை செய்யப்பட்டுள்ள யுத்த குற்றவாளியும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவுடன் கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் படமெடுத்துக்கொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

உலகத் தமிழர் பேரவை கனேடிய தமிழ் காங்கிரஸின் இந்த நடவடிக்கைகளை நான் கடுமையாகக் கண்டிக்கின்றேன். கனேடிய தமிழ் அமைப்புகளும் கனடா அரசாங்கமும் தமிழ் மக்களின் நீதி பொறுப்புக்கூறலிற்கு தீர்வைக் காண்பதில் உரிய தார்மீகநிலைப்பாட்டை தெரிவு செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். - என்றார். (05)

## இரு படகுகள், பல லட்சம் பெறுமதியான வலைகள் வடமராட்சி கிழக்கில் விசமிகலால் தீயிட்டு எரிப்பு

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கு உட்பட்ட இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான இரண்டு படகுகள், மற்றும் ரூபா 14 லட்சம் பெறுமதியான வலைகள் என்பவற்றை விசமிகள் தீயிட்டு எரித்துள்ளனர்.

இச்சம்பவம் வியாழக்கிழமை நள்ளிரவு கேவில் பாலையடி மேற்கு களப்பில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

இரண்டு நாள்களுக்கு முன்பு நடைபெற்ற கேவில் கடற்றொழிளாளர் கூட்டத்தில் இறால்களின் இனப்பெருக்கத்திற்காகவும், அதனை இறாலின் பருமன் வளர்சியை அதிகரிப்பதற்காகவும் இறால் கூடு கட்டுவதை தற்காலிகமாகத் தடை செய்திருந்தது.

இதை மீறி தொழிலில் ஈடுபட்ட பலரின் உபகரணங்கள் கைப்பற்றப்பட்ட போதும் விசமி ஒருவர் இரண்டு மீனவர்களுக்கு சொந்தமான மீன்பிடி உபகரணங்களை தீயிட்டு எரித்துள்ளதாக கேவில் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதில் க.மதிவாணன், க.சிவம் ஆகியோர்களது லட்சக்கணக்கான மீன்பிடி உபகரணங்களே இவ்வாறு நாசமாக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (05)

## அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் மீது தாக்கு

### கோடீஸ்வர வர்த்தகர் கைது

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் மற்றுமொரு காருடன் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து, வாகனத்தில் பயணித்தவர்கள் அமைச்சரின் வாகனத்தை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தங்கொட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் சென்று கொண்டிருந்தபோதே மாரவில மொதரவெல்ல தேவாலயத்துக்கு முன்பாக வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றதனையடுத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் தொடர்பில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)





குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்


5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

| MAIN DIHES | DESSERT | | BEVERAGES | |
|---|---|---|---|---|
| Vegitable Fried Rice with Panner & Ghee - 390/= | Ice Cream Cup | - 60/= | JUICE 200 ml | - 70/= |
| Chikne Fried Rice with Vegetable - 1150/= | Fruit Salad | - 60/= | Milk Drink | - 70/= |
| Kothu Rotty With Vegitable in Indian Style | I ce Cream & Fruit Salad | - 100/= | Cococola M | - 70/= |
| | Cream Caramel | - 120/= | Pepsi M | - 70/= |
| | | | Swabpees Tin | - 250/= |
| | | | Coca Cola Tin | - 250/= |

SPECIAL MENU PACKAGE

# மன்னாரில் டெங்கு பரவல் உச்சம்; இந்த மாதத்தில் 88 நோயாளிகள்

மன்னாரில் கழிவுகளை அகற்றல் செயன்முறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையினாலும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு அபாயம் அதிகரித்துள்ளதன் காரணமாக பொதுமக்கள் அவதானமாக செயல்படுவதுடன் டெங்கு அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடளாவிய ரீதியில் தற்போது டெங்கு நோயினுடைய தாக்கம் அதிகரித்துள்ளது. முழு இலங்கையையும் எடுத்துக் கொண்டால் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இந்த ஆண்டில் பதிவாகியுள்ளனர்.

மன்னார்மாவட்டத்தைப்பொருத்தவரையில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை 111 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேவேளை டிசெம்பர் மாதத்தில் மட்டும் இதுவரையில் 88 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். குறிப்பாக இந்த நோயாளர்களில் பலர் கொழும்பு கண்டி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு சென்று வந்தவர்களாவர்.

குறிப்பாக விடத்தல் தீவு மற்றும் மன்னார் நகரத்தின் சில பகுதிகளிலும் பேசாலை பகுதிகளிலும் அதிகளவான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயைப் பொறுத்தவரையில் சாதாரண டெங்கு காய்ச்சல், குருதி பெருக்குடனான டெங்கு காய்ச்சல் என இரு வகையான டெங்கு காய்ச்சல்கள் நிலைமைகள் உருவாகலாம்.

எது எவ்வாறாக இருக்கின்ற போதும் டெங்கு காய்ச்சலினுடையதும், குருதிப் பெருக்குடனான காய்ச்சலினுடையதும் ஆரம்ப அறிகுறிகளாக நெற்றி பொட்டை அண்டிய தலையிடி, கண்ணின் பின்புறம் நோவு, சிலருக்கு தொண்டை நோவு, தசை நோவு சிலருக்கு வயிற்றில் நோவு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

எவ்வாறு இருப்பினும் டெங்கு குருதி பெருக்குடனான காய்ச்சலாக மாற்றமடையும் சந்தர்ப்பத்தில் அவர்கள் அதிக களைப்படைந்தவர்களாக உடல் பகுதியில் குளிர்ந்தும் வலது பக்க வயிற்றின் மேல் பகுதி நோவுடனும் காணக்கூடியதாக இருக்கும்.

இவர்கள் இரத்தக் கசிவு என்ற நிலைக்கு உள்ளாகின்ற போது அபாயகரமான கட்டத்தை அடைகிறார்கள்.

இந்த கசிவு என்பது எமது குருதி நாடிகளில் இருந்து பிரிந்து செல்கின்ற குருதி மைத்துளை குழாய்களூடாக அதிகளமான நீர்பாயம் கலங்களுக்கும் குருதி மைத்துளைகளுக்கும் இடையில் வெளியேறுவதால் ஏற்படுகிறது.

இந்த கசிவு நிலை ஏற்படுகின்ற போது உடலில் அதிர்ச்சி நிலை ஏற்படும். இந்த அதிர்ச்சிநிலைமைகாரணமாக உடலினுடைய குருதி அமுக்கம் குறையும், மூளை இருதயம் போன்றவற்றுக்கு செல்கின்ற குருதியின் அளவு குறையும் இது சிலவேளை மரணத்தை ஏற்படுத்தும்.

அதேநேரம் இவ்வாறு வெளியே செல்கின்ற நீர்பாயம் மீண்டும் உள் வருவதற்கான தன்மை காணப்படுகின்ற போது அந்த அலர்ஜி காரணமாக அதிகமாக வெளியேறிய குருதி மயிர்த்துளை குழாய்களினுடைய துவாரங்கள் மூடுவதன் காரணமாக வெளியேறி திரவம் சில சந்தர்பங்களில் மீண்டும் உள்ளே வர முடியாத நிலை ஏற்படும்.

அவ்வாறு ஏற்படுகின்றபோது அவர்கள் இதயம் சுற்றும் மென்சவ் அலர்ஜி சுவாசப்பை அலர்ஜிமற்றும்மூளைவீக்கம்போன்றவற்றால் பாதிக்கப்பட்டு மரணம் அடையக் கூடிய சாத்தியம் இருக்கின்றது.

ஆகவே இந்த டெங்கு குருதி பெருக்குடன் காய்ச்சல் நோயாளிகள் கட்டாயமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டும்.

அவர்களுடைய குருதியின் சிறுதட்டுக்கள் எண்ணிக்கை குறைவடையும். ஆனால் குருதி சிறு தட்டுக்கள் உடைய எண்ணிக்கை ஒரு லட்சத்தையும் விட குறைவடைவதற்கு முன்பதாக சிலருக்கு கசிவு நிலை ஏற்படலாம்.

ஆகவே சில குணங்குறிவுகளை அடிப்படையாகக் கொண்டு உடலில் அதிகளவு களைப்பு, வயிற்றில் நோவு, தொடர்ந்து சத்தி, இப்படியான குணங்குறிகள் இருப்பின் அவர்கள் கட்டாயம் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெற வேண்டும்.

அவர்களுக்கு வழங்கப்படும் திரவமானது அவர்களுடைய உடலுக்கு தேவையானதும் சரியானதுமான அளவில் கொடுக்கப்பட வேண்டும். அதிகமாகவும் வழங்கக்கூடாது. குறைவாகவும் வழங்கக் கூடாது. அது வைத்தியசாலையில் தான் சரியான முறையில் அளவிட்டுதீர்மானிப்பார்கள். ஆகவே அவர்கள் வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது கட்டாயமாகும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# ‘கதிரானவத்தை குணா’ மட்டக்குளியில் கைது

*மட்டக்குளி, கதிரானவத்தை பகுதியில் வியாழக்கிழமை போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் அதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கதிரானவத்தை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ’கதிரானவத்தை குணா’ என்ற நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவருடைய வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போது 22 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சம்பவம் தொடர்பில் கைதானவரை பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வைத்து விசாரணை மேற்கொண்ட போது குறித்த போதை பொருள் சுமார் ஆறு லட்சம் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.*

*அத்துடன், கைதானவர் ஏற்கனவே ஹெரோயின் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்பதும் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)*



## மலையகம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் குமார் நடேசன், கோபியோ தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதி தலைவியுமான அனுசியா சிவராஜா, பிரதி தலைவர் கணபதி கனகராஜ், பிரதி தாவிசாளர் ராஜதுரை, தேசிய அமைப்பாளர் சக்திவேல், சிரேஸ்ட ஆலோசகர் மதியுகராஜா இ.தொ.காவின் உப தலைவர்களான சிவஞானம், பிலிப் குமார், அசோக் குமார், பாஸ்கர், பிரதி பொது செயலாளர் செல்லமுத்து உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டனர்.

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமைக்கு சமூகமளிக்க முடியாது போனவர்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

நாட்டின் பல்வேறு மாகாணங்களில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஆகியன காரணமாக தமது கடமைகளுக்குசமூகமளிக்கமுடியாத அரசஉத்தியோகத்தர்கள்இந்தவிசேட விடுமுறையை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

அரச ஊழியர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள கிராம அதிகாரியின் பரிந்துரையுடன் கூடிய விடுமுறை கோரிக்கையை, நிறுவன தலைவர்களுக்கு அனுப்பி, விண்ணப்பிக்க வேண்டும்.

அதனையடுத்துஅவர்களுக்கான விடுமுறை உரியமுறையில் உறுதிப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்படும் என்றுள்ளது.

## இந்தியாவி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முட்டை இறக்கு மதிக்கு சிலர் எதிர்ப்பினை வெளியிடுகின்றார்கள். அத்துடன் சில போலியான பரப்புரைகளும்மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வாறாயினும், தொடர்ச்சியாக முட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்நாட்டில் முட்டையின் விற்பனை விலை குறைவடைந்து வருகின்றது.

அத்துடன், பொதுமக்களின் நுகர்வுக்கு ஏற்றவகையில் தட்டுப்பாடற்ற சூழலும் காணப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படவுள்ள முட்டைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவை சந்தைக்குவிநியோக்கப்படவுள்ளன என்றார்.

## பெரமுனவுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் தெரிவித்ததாவது:

நான் பொதுஜனபெரமுனவை ஆதரிப்பதாகவும், ராஜபக்ஷக்களுடன் கைகோர்க்கவுள்ளேன் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில்ரணில்விக்கிரமசிங்கவை ஆதரிக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயங்களை நான் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியதாக சுதந்திரக்கட்சியின் சில உறுப்பினர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இவை அனைத்துமே தவறான தகவல்கள்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நாம் பொருத்தமான கொள்கையை வெளிப்படுத்தவுள்ளோம். அத்துடன் இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பக்கூடிய இளம் வேட்பாளர் ஒருவரையே களமிறக்கவுள்ளோம். இதனை தடுக்கும்வகையில்தான்போலியான பரப்புரைகள் செய்யப்படுகின்றன என்றார்.

## டிசெம்பரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

மேலும் சந்தையில் உள்ள பொருட்கள் சேவைகளின் விலைகளில் சராசரி அதிகரிப்பு காணப்படுகின்றமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

# தம்புள்ளை ஹோட்டல் அறையிலிருந்து பல வாகன இலக்கத் தகடுகள் சிக்கின



தம்புள்ளை பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள இரு வர்த்தகர்களுக்கு சொந்தமான ஹோட்டல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது அறையொன்றிலிருந்து பல வாகன இலக்கத் தகடுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த ஹோட்டலில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹோட்டலில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஹோட்டலில் இதற்கு முன்னர் பல முறை போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் இங்கு போதைப்பொருள் விற்பனை தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் இந்த இலக்கத் தகடுகள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெறாததால் இவை வாகனங்களை விற்பனை செய்வதற்கோ திருடுவதற்கோ அல்லது வேறு குற்றச் செயல்களுக்கோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் , தம்புள்ளை பகுதிகளில் உள்ள வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம் புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 45 மில்லியன் ரூபா மோசடி செய்த நபர் தொடர்பில் தகவல் கோரும் பொலிஸார்

45 மில்லியன் ரூபாவை மோசடிசெய்தார் என சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கைது செய்ய பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இந்த நபர் கார் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி அதன் மூலம் 45 மில்லியன் ரூபாவை மோசடிசெய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் ஏனைய சந்தேக நபர்களுடன் இணைந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அலுவலகமொன்றை வாடகைக்குப் பெற்று வாகனங்கள் விற்பனைக்கு உள்ளன எனப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளார். இந்த விளம்பரங்களைப் பார்த்த இருவர் கார் மற்றும் ஜீப் வாங்குவதற்காக அலுவலகத்துக்குச் சென்றிருந்தனர். இதன்போது குறித்த சந்தேக நபர் வாகனங்களைக் காண்பித்துள்ளார்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட வாகனங்களின் விற்பனை ஆவணங்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பணம் செலுத்துமாறு வாகனக் கொள்வனவுக்கு வந்தவர்களிடம் கோரியுள்ளார். இதனையடுத்து அவர்கள் இருவரும் 45 மில்லியன் ரூபாவை குறித்த நபரிடம் வழங்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் வரை காத்திருக்குமாறு வாங்குபவர்களிடம் கூறிய சந்தேக நபர், அலுவலகத்தின் பின்கதவு வழியாக பணத்தை எடுத்துக்கொண்டு வெளியேறிய காட்சிகள் சிசிரிவி கமராவில் பதிவாகியிருந்தன.

அலுவலகத்திலிருந்தவெளியேறிய நபர்கள் மீண்டும் அலுவலகம் வராத நிலையில் அங்கு காத்திருந்த கொள்வனவாளர்கள் இருவரும் பொலிஸில் முறைப்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பெண் பொலிஸார் மீது பாலியல் முறைகேடு

## நால்வர் கைது

களுத்துறை பிரதேசத்தில் உள்ள விளையாட்டு மைதானமொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பெண் பொலிஸ் உத்தியோகத்தரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வாதுவ, வஸ்கடுவ மற்றும் பொஹொத்தரமுல்ல ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 26 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களாவர்.

பாதிக்கப்பட்ட பெண் குறித்த நிகழ்வில் பொலிஸ் சீருடையில் கடமையாற்றி கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு கடமையில் இருந்த ஏனைய பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கிய நிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தை பேசுபொருளாக்கத் தெற்கு அரசும் ஜனாதிபதியும் முயற்சி

## இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டு

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தை மிகவும் பேசும் பொருளாக மாற்றுவதற்கு தெற்கினுடைய அரசாங்கமும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முயற்சி எடுத்து வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தை மிகவும் பேசும் பொருளாக மாற்றுவதற்கு தெற்கினுடைய அரசாங்கமும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

தமிழ் வேட்பாளர் விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துகள் தொடர்பில் தென்னிலங்கை ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து அவதானித்து வருகின்றன. அது தொடர்பில் தொலைபேசி ஊடாக என்னிடம் பல அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இதனை பார்க்கும் போது தெற்கிலே இருக்கும் பேரனிவாத சக்திகள் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதன் ஊடாக அதனைப் பிரபல்யப்படுத்துவதாகத் தெரிகிறது.

இதற்குபின்னணியில்உள்ளவிடயங்களை நாம் பேசியாகவேண்டும். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு துரும்புச் சீட்டு. ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுடைய வாக்குகள் இன்றி தனியே சிங்கள மக்களது வாக்குகளினல் மட்டு ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம் என்ற நிலை காணப்படும் போது தமிழர் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்களுடைய விடயங்களை முன்னிறுத்திஅதற்குஆணைகோரும்சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதுஎனதுதனிப்பட்டகருத்தாகும். அதனை நாங்கள் மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு முறைதான் செய்யலாம். அதனை ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நியமித்து மக்களிடம் வாக்களிக்குமாறு கோரமுடியாது.

தற்போது கடந்த சில வாரங்களாக இது தொடர்பில் கருத்து தெரிவித்து வருபவர்கள் யாரென்று பார்த்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள் தான் இவ்வாறு தெரிவித்து வருகின்றனர். எல்லோரும் இணைந்து கோட்டால் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடத் தயாராக இருப்பதாக முன்னாள் நீதியரசரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்திருந்தமையைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

விக்னேஸ்வரன் ஐயாவினுடைய கடந்த ஒன்றரை வருட கால செயற்பாடுகளை அவதானித்துப் பார்த்தால் 2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக ரணில்விக்ரமசிங்கதெரிவுசெய்யப்பட்டபோது ஆதரவாக வாக்களித்தவர். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நடத்திய சர்வகட்சி மாநாட்டின் போது இவருடைய கையிலும் ஜனாதிபதியுடைய கையிலும் பேசப்படப்போகின்ற விடயம் தொடர்பில் ஒரே ஆவணம் இருந்தது. இது அவர்கள் இருவருக்குமான நெருங்கிய உறவை வெளிப்படுத்துகிறது. நாடாளுமன்ற வாக்கெடுப்புகளின் போதெல்லாம் ஒன்றில் கலந்துகொள்ளாமல் இருந்திருப்பார். இல்லாவிட்டால் ஆதரவாக வாக்களித்திருந்தார். ஒருபோதும் எதிராக வாக்களித்திருக்கவில்லை.



அண்மையில் ஜனாதிபதி அழைத்த கூட்டத்திற்கு, மக்களுடைய கோரிக்கைகள் எதனையும் ஜனாதிபதி நிறைவேற்றவில்லை என்ற காரணத்தால் கலந்து கொள்ளப்போவதில்லை எனக் கூறி சி.வி.விக்னேஸ்வரன் ஐயா அறிவித்திருந்தார். இதன் மூலம் தான் ஜனாதிபதிக்கு எதிரானவர் என்பதை மக்களுக்குக் காட்டுவதற்கு முற்படுகின்றாரா என்ற சந்தேகம் எழுகிறது. இந்தப் பின்னணியில் தான் தமிழ் பொதுவேட்பாளராக அழைத்தால் போட்டியிடத் தயார் என அவர் கூறியமையைப் பார்க்க வேண்டியுள்ளது. எதிர்வரும் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால் அதில் போட்டியிடுவதற்கு அனுரகுமார திசநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் அவரவர் கூட்டணி சார்பில் போட்டியிடப்போவதாக பகிரங்கமாகக் கூறியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் மீதமாக இருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐ.தே.க. சார்பில் அல்லது பெரமுன சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் நிலைதான் காணப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்கினால் பெரும்பான்மை இன சிங்கள மக்களை அவருக்கு வாக்களிக்குமாறு மஹிந்த ராஜபக்ச பகிரங்கமாக சொல்ல வேண்டும். அவ்வாறு மஹிந்த ராஜபக்சவின் நேரடி ஆதரவுடன் மொட்டு கட்சியின் வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க வேட்பாளராக களமிறக்கப்பட்டால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவு இல்லை என்பது உறுதியாகத் தெரியும். அதேபோன்று இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுடைய வாக்குகளும் அவருக்கு கிடைப்பது சந்தேகமாகும்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுடைய வாக்குகள் இன்னொரு வேட்பாளருக்கு போகாமல் தடுக்கும் நோக்கில் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் கையிலெடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுகிறது. தமிழ்பொதுவேட்பாளர் கணிசமான தமிழ்வாக்குகளை பிரித்தால் பெரும்பான்மை இன சிங்கள வாக்காளர்களது வாக்குகள் மூன்றாக பிளவுபடும் நிலை ஏற்பட்டு அவர்களுக்காகவே போட்டியிடும் நிலை ஏற்படும். இந்த பின்னணியில் தான் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபொருளாக்கி நாடிபிடித்து பார்க்கும் தந்திரத்தை ரணில் விக்கிரமசிங்க அரங்கேற்றியிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது.

தமிழ்பொதுவேட்பாளரை துரும்புச்சீட்டாக பயன்படுத்த வேண்டும் என்று நான் கூறிய விடயம்இன்றுஉள்ளசூழலில்பொருத்தப்பாடில்லாத நிலையே காணப்படுகிறது. இன்று தமிழ் மக்களுடைய வாக்குதான் அடுத்த ஜனாதிபதியாக யார் என்பதை தீர்மானிக்கக் கூடிய இடத்தில் இருக்கிறது. இந்தப் பின்னணியில் இருந்து தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபவர்கள் குறித்து நாம் அனைவரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அவர்களது உள்நோக்கங்களைப் பார்க்க வேண்டும். - என மேலும் தெரிவித்தார். (05)

# சந்தேகநபர்களை கைதுசெய்யும்போது ஈவிரக்கமற்று செயற்படும் பொலிஸார்

## வீடியோ குறித்து பொலிஸ் பேச்சாளர் விளக்கம்

குருநாகலில் சந்தேக நபர் ஒருவரைகைதுசெய்யும்வேளை பொலிஸார் அவரை மோசமாக தாக்குவதை காண்பிக்கும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள அதேவேளை பொலிஸ் பேச்சார் இந்த சம்பவம் குறித்து விளக்கமளித்துள்ளார்.

டிசெம்பர் 26 ஆம் திகதி குருநாகலின்டொரட்டியாவைபகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர்போதைப்பொருள்களை வைத்திருத்தல் களவு போன்ற குற்றச்சாட்டுகளின்அடிப்படையில் சந்தேகநபரை பொலி ஸார் கைதுசெய்தனர் எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வீடியோவில் காணப்படும் நபர் போதைப்பொருளிற்கு அடிமையானவர்போதைப்பொருள்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளவர் அவரைக் கைதுசெய்தவேளை அவரிடம் 2 கிராம்ஹெரோயின்காணப்பட்டது அவரை கைதுசெய்ய முயன்ற வேளை அவரை பொலிஸார் தாக்கவில்லை என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



குருநாகல் பகுதியில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் மோசமாகத் தாக்குவதை காண்பிக்கும் வீடியோவொன்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

நான் தப்புவதற்கு முயற்சிக்க மாட்டேன் என அந்த நபர் தெரிவிக்கின்ற போதிலும் பொலிஸார் அவரைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குகின்றனர்.

இரண்டுபொலிஸார்நிலத்தில் ஒருவரை மடக்கிபிடித்தபடி அவரை கயிற்றால் கட்டுவதற்கு முயல்வதை வீடியோவில் பார்க்க முடிகின்றது.

ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேகநபரின் மேல் அமர்ந்திருக்கின்றார் மற்றைய பொலிஸ்உத்தியோகத்தர்அவரை கயிற்றால் கட்ட முயல்கின்றார்.

அவ்வேளை சந்தேகநபர் அலறுவதையும் தனது கழுத்தை விடுமாறு மன்றாடுவதையும் அவதானிக்க முடிகின்றது.

சந்தேகநபரின் காலை கட்டும் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றைய பொலிஸ் உத்தியோகத்தரிடம் சந்தேகநபர் தப்பமுடியாது என தெரிவிக்கின்றார்.

எனினும் சந்தேகநபர் மீது அமர்ந்திருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேகநபரை விட மறுப்பதுடன் அவரின் கைகளையும் கட்டுமாறு கேட்கின்றார்.

பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேகநபரை பிடித்து வைத்து தாக்கும்வேளையில் சந்தேகநபர் தான் தப்பியோடமாட்டேன் என அலறுவதை அவதானிக்க முடிகின்றது. (05)

# போதைபொருளுடன் யார் சம்பந்தப்பட்டாலும் அவர் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து



யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளுடன் யார் சம்பந்தப்பட்டாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாரிடம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் போதைவஸ்து விடயம் தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருள் கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரது யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் பொலிஸார் பரிசோதனையிட சென்றபோது அங்கே பரிசோதனையிட அனுமதி வழங்கப்படாமை தொடர்பில் கேள்வி எழுப்பிய அமைச்சர், அவ்வாறு நீங்கள் செயற்பட முடியாது. எவராக இருந்தாலும் நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேநேரம், ''வடக்கு மாகாணத்தில் போதைப் பொருளுடன் தொடர்புடையோர் யாருடைய செல்வாக்கையும், பயன்படுத்த முடியாது. யாராக இருந்தாலும் கட்டாயமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் அந்த விடயத்தில் தவறிழைக்கக் கூடாது.

என்னுடைய பெயரைப் பாவித்தால் கூட நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' எனவும் அமைச்சர் தெரிவித்தார். (05)

# 13 வயது பாடசாலை மாணவர்களுடன் விடுதியில் இருந்த ஆசிரியை கைது

அநுராதபுரம் - எப்பாவல பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் 13 வயது பாடசாலை மாணவர்களுடன் தங்கியிருந்த பாடசாலை விளையாட்டு ஆசிரியை எப்பாவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பாடசாலையில் விளையாட்டு ஆசிரியையாகக் கடமையாற்றும் 51 வயதுடைய பெண்ணாவார்.

இவர் குறித்த மாணவர்களது பெற்றோர்களிடம் கடந்த 27 ஆம் திகதி அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற வலைப்பந்தாட்ட விளையாட்டு பயிற்சிக்கு செல்வதாகக் கூறி மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இவர் மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பாமல் எப்பாவல பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றிற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் நபரொருவரிடமிருந்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் குறித்த விடுதியில் இருந்து ஆசிரியை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைஎப்பாவலபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.(05)



# தாய் மற்றும் 2 வயது குழந்தையின் சடலங்கள் இரத்தினபுரியில் மீட்பு

இரத்தினபுரி -கெஹெல்ஓவிடிகம பிரதேசத்தில் தொடர் குடியிருப்பு அறையொன்றிலிருந்து இளம் தாய் மற்றும் 2 வயது குழந்தையின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

2 வயதுடைய ஆண் குழந்தையும், சிவ நாதன் வசந்தகுமாரி என்ற 21 வயதுடைய இளம் தாயுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். தாய் குழந்தையை கொன்று பின்னர் தானும் தற்கொலை செய்துள்ளார் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவரது கணவர் ஐந்து நாள்களுக்கு முன்னர் வீட்டைவிட்டுவெளியேறியுள்ளதாகவிசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எலபத பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் சிந்தித்துச் செயற்படுதல்வேண்டும்

## வஜிர அபேவர்தன 'அட்வைஸ்'



ஜனாதிபதி தேர்தலில் இலங்கை மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட பேரழிவு மீண்டும் தங்களின் எதிர்கால பிள்ளைகள் அனுபவிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பல வருடங்களுக்கு பின்னர் எமது நாட்டு கிறிஸ்தவ மக்கள் இந்த முறை நத்தார் தினத்தைக் கொண்டாட முடியுமாகி இருந்தது.

கடந்த 3 வருடங்களாக பொருளாதார நெருக்கடி, உலகில் ஏற்பட்ட தொற்று நோய் நிலைமைகள் காரணமாக எமது நாட்டு மக்கள் மிகவும் அழுத்தத்துடனே இருந்தார்கள். சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்களுக்கு தங்களின் மத நிகழ்வுகளை அனுஷ்டிக்க முடியாத நிலை இருந்தது.

இந்த அழுத்தம் இறுதியில் நாங்கள் வங்குரோத்து தேசமாக மாறினோம்.

அத்துடன் வங்குரோத்து அடைந்த இந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இல்லாத சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்ரமசிங்க இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

எப்படியாவது ஒருவருடமும் 6 மோதங்கள் ஆகும்போது இந்த வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு ரணில் விக்ரமசிங்கவுக்கு முடியுமாகியுள்ளது.

இதன் காரணமாக எமது வியாபாரிகளின் கடன் நாணயக் கடிதம் உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் நாணயக் கடிதமாக மாறியுள்ளது.

அத்துடன் 2024 ஜனவரியாகும்போது எமக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி. ஜெய்க்கா நிறுவனம் உள்ளிட்ட எமக்கு நன்கொடை வழங்கிய மற்றும் கடன் வழங்கிய குழுவினர் நிறுத்தியிருந்த அபிருத்தி வேலைத்திட்டங்கள் மீண்டும் இலங்கைக்குள் ஆரம்பிக்க இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு தற்போது பிரதான விடயமாக இருப்பது ஜனாதிபதி தேர்தல் எப்போது நடத்துவது என்பதாகும்.

அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறங்கப்போவதாகப் பலரும் தெரிவித்திருக்கின்றனர். எவ்வாறு இருந்தாலும் இலங்கை மக்கள் இதுதொடர்பாக மிகவும் சிந்தித்து செயற்பட வேண்டி இருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்வந்திருக்கும் வேட்பாளர்களுக்கு நாடொன்றை நிர்வகிக்க முடியுமா அல்லது இந்த வேட்பாளர்களுக்கு உலகத் தலைவர்களை சமாளித்துக்கொண்டு இலங்கையை முன்னுக்கு கொண்டுசெல்ல முடியுமா என்பதை மக்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க கடந்த ஒருவருடம் 6 மாதங்களுக்குள் அமெரிக்க ஜனாதிபதி, சீன ஜனாதிபதி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இந்திய பிரதமர் உள்ளிட்ட உலகில் பிரதான தலைவர்களின் கவனத்தை இலங்கையின்பால் செலுத்தியே இலங்கையை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டு, முன்னோக்கி கொண்டுசெல்கிறார்.

உலகில் பல நாடுகள் வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் மீள முடியாத நிலையில் இருக்கும்போது ரணில் விக்ரமசிங்க தனது அனுபவம் மற்றும் ஆளுமை காரணமாக எமது நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டிருக்கிறார்.

மேலும் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்துகொள்வதற்கான தேர்தல், பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒருமாதகாலத்துக்கு குறையாத மற்றும் இரண்டு மாதங்களைவிட அதிகாரிக்காத கால வரையறைக்குள் இடம்பெற வேண்டும்.

அப்படியானால் தற்போது இருக்கும் ஜனாதிபதி போட்டியிடுவதாக இருந்தால், தான் போட்டியிடுவதாகத் தெரிவிக்க வேண்டும்.

அதன்போது ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். அவ்வாறு இல்லாவிட்டால் தேர்தல் ஆணையாளரின் கடமையை செய்ய வேண்டி ஏற்படுகிறது.

அரசியல் கட்சிகள் தெரிவிக்கும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி நாட்டு ஜனாதிபதிக்கு செயற்பட முடியாது. என்றாலும் நாங்கள் மீண்டும் எரிபொருள் வரிசைக்கு, எரிவாயு வரிசைக்கு செல்வதா நாட்டை வீழ்ச்சியடையச் செய்வதா அவ்வாறு இல்லாவிட்டால் தற்போது மேற்கொண்டிருக்கும் தேசிய கொள்கை கட்டமைப்பை அடுத்துவரும் 12 வருடங்களுக்காவது தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கையை எடுக்கிறதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். - என்றார். (05)

# புதையல் தோண்டிய மூவர் திஸ்ஸமஹாராமயில் கைது

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் உள்ள காணியொன்றில் புதையல் தோண்டிக் கொண்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் கதிர்காமம் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் உட்பட மூவர் புதையல் தோண்டப் பயன்படுத்திய பொருள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த கதிர்காமம் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர், ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்த இராணுவ சிப்பாய் மற்றும் மதவெல பிரதேசத்தை சேர்ந்த மேசன் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கதிர்காமம் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தருக்கு சொந்தமான காணியொன்றிலேயே இவ்வாறு புதையல் தோண்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமஹாராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# திருகோணமலை கடலில் நீராடிய மாணவன் மாயம்

திருகோணமலையில் மாபிள் கடலில் மாணவர்களுடன் நீராடிக் கொண்டிருந்த மாணவர் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

காணாமல்போனவர் மாவத்தகம, இங்குருவத்த பிரதேசத்தைச்சேர்ந்த 17 வயதுடைய மாணவராவார்.

இவர் சுற்றுலா நிமித்தம் 10 மாணவர்கள், 12 மாணவிகள், ஓர் ஆசிரியர் மற்றும் மூன்று பெற்றோர்களுடன் பஸ்ஸில் திருகோணமலைக்கு வந்துள்ளார்.

இதன்போது மாபிள் கடலில் மாணவர்கள் நீராடிக் கொண்டிருந்த போது மூன்று மாணவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் இரு மாணவர்கள் கடற்படை அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒரு மாணவர் மாத்திரம் நீரில் காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன மாணவனைத் தேடும் பணியில் பிரதேசவாசிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் தீவிரமாக செயற்பட்டு வரு கின்றனர். (05)

# சிறுமியின் நிர்வாணப் படங்களை இணையத்தில் ஏற்றிய பெண் கைது

காதலை முறித்த காதலனின் ஏழு வயது மகளின் நிர்வாண படங்களை இணையத்தளத்தில் பதிவிட்ட பெண் ஒருவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேயிலை தொழிற்சாலையில் பணிபுரியும் கம்பஹா கலகெட்டிஹேன பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குறித்த தொழிற்சாலையில் இவருடன் பணிபுரியும் திருமணமான நபரொருவருடன் பல வருட காலமாக காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ளார்.

இந்நிலையில் அந்நபர் இந்த காதல் உறவிலிருந்து விலக முடிவு செய்துள்ளார்.

இதனை அறிந்து கொண்ட பெண் அந்நபரின் மகளின் புகைப்படங்களை நிர்வாணப்படங்களாக தயாரித்து அந்நபரின் வட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர் இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கியதையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# மட்டக்களப்பு பெரியகல்லாறு ஆற்றுவாய் வெட்டப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவந்த பலத்த மழை சனிக்கிழமை சற்று ஓய்ந்துள்ளது. எனினும், வெள்ள நீர் வழிந்தோட வழியின்றி கிராமங்களுக்குள்ளும், அங்குள்ள வீதிகள் மற்றும் வீடுகளுக்குள்ளும் தேங்கிக் கிடப்பதால் மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்பு, பெரியகல்லாறு பகுதியில் அமைந்துள்ள ஆற்றுவாய் வெட்டிவிடப்படும் பட்சத்தில் மிக விரைவாக வெள்ள நீர் வழிந்தோடுவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளன என அப்பகுதி மக்கள் குறிப்பாக, மீனவர்கள், விவசாயிகள் மட்டக்களப்பு மாவட்ட இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கிணங்க, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் நீர்ப்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எந்திரி ந.நாகரெத்தினத்துக்கு வழங்கிய ஆலோசனைக்கமைய சனிக்கிழஷ்மாலை பெரியகல்லாறில் அமைந்துள்ள முகத்துவாரம் (ஆற்றுவாய்) பெக்கோ இயந்திரத்தின் மூலம் அகழப்பட்டு, வெள்ளநீரை கடலுக்குள் அனுப்பும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆற்றுவாய் வெட்டும் பணி இடம்பெறும் இடத்துக்கு இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் பிரதிநிதியாக அவரது செயலாளர் பூ.பிரசாந்தன், நீர்ப்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எந்திரி ந.நாகரெத்தினம், நவகிரி பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் சு.கிசோகாந்த் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் சென்று பார்வையிட்டனர்.

தமது கோரிக்கைக்கிணங்க, ஆற்றுவாய் வெட்டி, தேங்கியுள்ள வெள்ள நீரை கடலுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டவர்களுக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற முதியவர் மீது தாக்கு

யாழ். கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த குறித்த முதியவர் பாரிச வாதம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். அவரை பராமரிப்பதற்கு ஒருவர் 2,500 ரூபா சம்பளத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அந்த முதியவர் மீது வெள்ளிக்கிழமை அந்தப் பராமரிப்பாளர் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்நிலையில் அந்த முதியவரை உறவினர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கலென்பிந்துனுவெளவில் கஞ்சா வளர்த்தவர் கைது

அனுராதபுரம் - கலென்பிந்துனுவெள பிரதேசத்தில் கஞ்சாச் செடியை பயிரிட்டவர் 8 கிராம் கஞ்சா பொதியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மாலை பொலிஸாரால் நடத்திய விடே சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் சுவஸ்சக்திகம, படிகாரமடுவ பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட பொலிஸார் அங்கு கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டநபர் சனிக்கிழமை கஹட்டகஸ்திகிலிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நடிகனாக இருப்பதைவிட நல்ல மனிதனாக வாழ்ந்து காட்டிய......

பொதுவாழ்வில் முதலில் கிடைத்த பொறுப்பு, தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் பதவி. மிகச் சிறப்பாகச் செயல்பட்ட அவர், தமிழர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் நட்சத்திரக் கலை விழா நடத்தி, நடிகர் சங்கக் கடனை வட்டியும் முதலுமாக அடைத்தார். மீதித் தொகை சுமார் ரூ.1 கோடியை வங்கியில் டெபாசிட் செய்து, நலிந்த கலைஞர்களுக்கு உதவிசெய்தார். 1996இல் அரசியல் காரணங்களுக்காக, எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதியின் திரையுலகப் பொன்விழாவைக் கொண்டாட திரையுலகம் தயங்கி நின்றபோது, துணிந்து தானே தலைமை தாங்கி விழாவைப் பிரம்மாண்டமாக நடத்திக் காட்டினார்.





### திடீர் தலைவரல்லர்

யாரோ சொல்லி திடீரெனக் கட்சி தொடங்கியவர் அல்லர் விஜயகாந்த். 15 வயதிலேயே அரசியலில் ஈடுபட்ட அவர், நடிகரான பிறகும் (1979) அரசியலை ஒதுக்கியதில்லை. 1985களிலேயே தனது ரசிகர் மன்றத்தையும் ஓர் அரசியல் இயக்கம்போல வளர்த்தெடுத்தார். மன்ற நிகழ்ச்சிகளில் தானே கலந்துகொண்டு உதவிகள் வழங்கியவர், மன்றத்துக்கென தனிக் கொடியை அறிமுகப்படுத்தினார்.

திருமணத்துக்குப் போனால்கூட வழியோரக் கிராமங்களில் மன்றக்கொடி ஏற்றிவைத்தார். 2001உள்ளாட்சித் தேர்தலில் அவரது ஆதரவுடன் மன்ற நிர்வாகிகள் சிலர் சுயேச்சையாகப் போட்டியிட்டு வென்றனர். இப்படி திட்டமிட்டுச் செயல்பட்ட அவர், 2005இல் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தைத் தொடங்கினார். 14.9.2005ஈல் மதுரையில் நடந்த கட்சித் தொடக்க விழாவில், சுமார் 3 லட்சம் பேரைத் திரட்டி தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தார். ரசிகர் மன்ற அடித்தளம்தான், டெல்லியில் வேட்பாளர் நிறுத்துமளவுக்கு அவருக்குத் தைரியத்தைக் கொடுத்தது.

### சட்ட மன்ற உறுப்பினர்

திமுக, அதிமுகவை மட்டுமின்றி, அக்கட்சிகளுடன் மாறிமாறிக் கூட்டணி வைக்கும் கட்சிகளையும் சரமாரியாகச் சாடிய அவர், ஊழலை ஒழிப்பேன். மக்களுடனும் தெய்வத்துடனும் மட்டுமே கூட்டணி வைப்பேன் என்று பிரச்சாரம் செய்தார். அவரது திருமண மண்டபத்தில் கை வைத்தது திமுக. 'கஜேந்திரா' படப்பெட்டியைத் தூக்கியது பாமக. ஊர்தோறும் கட்சிக்கொடியை வெட்டி வீழ்த்தியது அதிமுக. அசராமல், 232 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்திய விஜயகாந்த், பாமகவின் கோட்டையான விருத்தாச்சலத்தில் வெற்றி வாகை சூடினார். கட்சி ஆரம்பித்த ஏழே மாதங்களில் தமிழகம் முழுக்க 28 லட்சம் வாக்குகளைப் (8.38%) பெற்று தமிழகத்தின் மூன்றாவது பெரும் கட்சியாக தேமுதிகவை நிலைநிறுத்தினார்.

### எதிர்க்கட்சித் தலைவர்

2011 தேர்தலில் ஜெயலலிதாவின் அழைப்பின் பேரில் அதிமுகவுடன் கூட்டணி வைத்த அவர், போட்டியிட்ட 49 தொகுதிகளில் 29இல் வென்று, தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவரானார். முதல் முறையாக சட்டசபை கூடியபோதே, ஜெயலலிதாவின் பேச்சால் கோபமடைந்து, சினிமா பாணியில் நாக்கைத் துருத்திப் பதிலடி கொடுத்தார். பதிலுக்கு பண்ருட்டி ராமச்சந்திரன் உள்ளிட்ட 9 தேமுதிக சட்டமன்ற உறுப்பினர்களை அதிமுகவுக்கு இழுத்து, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் காலிசெய்தார் ஜெயலலிதா.

2014 மக்களவைத் தேர்தலிலும், 2016 சட்ட மன்றத் தேர்தலிலும் யாருடன் கூட்டணி அமைப்பார் என்று பட்டிமன்றமே நடக்கும் அளவுக்குக் கட்சிகளைக் காக்கவைத்தார்.

இரு தேர்தல்களிலும் பெரும் தோல்வி. விஜயகாந்தின் ஆகப் பெரிய பலம் அவரது யதார்த்தமான பேச்சு. கட்சி தொடக்க விழாவில் சுமார் இரண்டே முக்கால் மணி நேரம் பேசினார். அப்படியான பேச்சுக்கு சொந்தக்காரர்.

நல்ல நடிகனாக இருப்பதைவிட நல்ல மனிதனாக இருப்பதே என்று அடிக்கடி சொல்லி வந்தார். அப்படித்தான் வாழ்ந்தும் வந்தார் என்பதை அவரது இறுதி அஞ்சலிக்காகக் கூடிய கூட்டம் உணர்த்தி நின்றது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2023இல் வெளியிடப்பெற்றது.